# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2029 மார்கழி 3 வெள்ளிக்கிழமை (18-12-1998) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:19


# அடுத்த 18 மாதகாலத்தில் அனைத்து தேர்தல்களும் நடத்தி முடிக்கப்படும்

## மங்கள சமரவீர தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 18

அடுத்த பதினெட்டு மாதங்களுக்குள் சகல தேர்தல்களையும் நடத்தி முடிப்போம்.

இவ்வாறு தபால், தொலைத்தொடர்பு, தொடர்புச் சாதனத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று நடந்த சமயம் மேற்கண்டவாறு அவர் கூறினார்.

ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் உட்பட எஞ்சியுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தல் ஆகியவற்றை அடுத்த பதினெட்டு மாதங்களில் நடத்தி முடிப்பதென அரசு முடிவு செய்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தெற்கில் உள்ள ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தல்களை பிற்போட்டு வந்த அரசாங்கம் ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல்களையும் பிற்போடும் என ஊகங்கள் வெளியாகியிருந்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நான்காம் நாளாக உண்ணாவிரதம்

களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் மேற்கொண்டு வரும் உண்ணாவிரதப் போராட்டம் நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

களுத்துறைச் சிறைச்சாலைக் கூரையில் ஏறி 27 பேர் உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்தனர். நேற்று மேலும் 9 பேர் உண்ணாவிரதத்தில் இணைந்து கொண்டனர்.

தமது கோரிக்கைக்கு சாதகமான முடிவு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என அவர்கள் தெரிவித்துள்ளனர் (இ-3)

## சொத்தி உபாலி சுட்டுக் கொலை

கொழும்பு, டிசெ 18

பாதாள உலகக் குழுவின் முக்கிய புள்ளியான சொத்தி உபாலி என அழைக்கப்படும் டொன் றஞ்சித் உபாலி டீ சில்வா நேற்றுக்காலை பிலியந்தலையில் வைத்து இனந்தெரியாத குழு ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தமது சொந்த இடமான அறந்தவ்லகேயில் இருந்து கொழும்பு நோக்கி அவர் பஸ்ஸில் சென்று கொண்டிருந்த சமயம் பிலியந்தலையில் போந்தறை என்ற இடத்தில் அந்த பஸ்ஸை மறித்த ஆயுதம் தாங்கிய குழு ஒன்று அவரை பஸ்ஸில் இருந்து இறக்கி துப்பாக்கியால் சுட்டது.

அந்தச் சூட்டில் உபாலி காயம் அடைந்தார்.

காயமடைந்த உபாலியை தாம் வந்த ஓட்டோவில் ஏற்றிச் சென்று மற்றுமொரு இடத்தில் வைத்து அக்குழுவினர் மீண்டும் சுட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்த இடத்திலேயே உபாலி மரணமானார்.

இந்தச் சம்பவம் குறித்து பிலியந்தலை, இரத்மலானை பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-3-7)

# மட்டுப்படுத்தப்பட்ட ராணுவ நடவடிக்கை

## குடாநாட்டிலும், வன்னியிலும்

கொழும்பு, டிசெம்பர் 18

யாழ் மாவட்டத்திலும், வன்னியிலும் பல மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளைப் படையினர் ஆரம்பித்துள்ளனர்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் மேற்கண்ட நடவடிக்கைகள் தொடர்பான விவரங்களை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் மாநாட்டில் பேசுகையில் அவர் இது தொடர்பான விவரங்களை தெரிவித்தார்.

கடந்த 48 மணி நேரத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலும், வன்னியிலும் மட்டுப்படுத்தப்பட்ட பல நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டுள்ளனர்.

குடாரப்பு, கைதடிப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளிலும் 11 படையினர் காயம் அடைந்தனர். இந்த நடவடிக்கைகளில் ஆறு விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர்.

பரந்தன் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. ஊழியர்களுக்கு இடர்கால கொடுப்பனவு

### அமைச்சரவை அங்கீகாரம்

யாழ்ப்பாணம், டிசெ. 18

வடக்கு-கிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு வழங்குவதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை நேற்று வழங்கியது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் திலகரத்தின இத்தகவலை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளைக்கு அறிவித்துள்ளார்.

இடர்காலக் கொடுப்பனவு தொடர்பாக யாழ். பல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை மறுதினம் மீண்டும் பயணிகள் கப்பல் சேவை

### இன்று ரிக்கெட் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், டிசெ. 18

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு 'லங்கா முடித்த' கப்பல் மூலம் ஆயிரம் பயணிகளை நாளை மறுதினம் அழைத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

இந்தக் கப்பலில் செல்லவிருக்கும் பயணிகளுக்கு இன்று காலை 10 மணி முதல் தமது அலுவலகத்தில் வைத்து பயண

(10ஆம் பக்கம் பார்க்க)



காலக்கெடுக்கள் வழங்கிய சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறப் போகுது பாருங்கோ...!

## நேற்று மாலை மீண்டும் தாக்கு

### ஈராக் நிலைகள் மீது விமானங்கள் குண்டு மாரி

பாக்தாத், டிசெ. 18

ஈராக்கின் பாதுகாப்பு நிலைகள் மீது நேற்று மாலை மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டது.

அமெரிக்க குண்டு வீச்சு விமானங்கள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டன.

ஈராக் அதிபர் சதாம் ஹுசேய்னின் மாளிகைப் பகுதியிலும் விமானங்கள் குண்டுகளை வீசின.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தப்பிய படையினர் சரணடைவதற்கு 48 மணி நேர அவகாசம் விதிப்பு!

கொழும்பு, டிசெ. 18

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களின் பெற்றோர் விடுத்த வேண்டுகோளை அடுத்து, தப்பி ஓடியவர்கள் மன்னிப்புடன் சரண் அடைய மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் [illegible] யம் அதிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

தப்பி ஓடிய படையினர் நாளை மறுதினம் நள்ளிரவு வரையான 48 மணி நேரத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க தாக்குதலுக்கு புளொட் கண்டனம்

யாழ்ப்பாணம், டிசெ. 18

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் இணைந்து ஈராக் மீது நடத்தும் தாக்குதலை புளொட் அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

புளொட் அமைப்பின் உப தலைவர் என். மாணிக்கதாசன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இந்தக் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அச்செய்திக் குறிப்பில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குரல் பற்றி செய்தியாளர்கள் கேள்வி

கொழும்பு, டிசெ. 18

விடுதலைப் புலிகளின் வானொலியான 'புலிகளின்குரல்' நிகழ்ச்சிகள் சிற்றலை வரிசையில் ஒலிபரப்பாவது தொடர்பாக தமக்கு தெரியாது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி

யா/ நுணசை வித்தியாலய முன்னாள் ஆசிரியரும் சிறந்த சமூகசேவையாளருமாகிய

**திருநாவுக்கரசு சிவராஜன்**

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாதகல் மேற்கு
சனசமூக நிலையத்தினரும், நண்பர்களும்.
(61388)

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் சகமாணவி
செல்வி யோ. ரதிக்காவின் அன்புத் தந்தையார்

**சின்னையா யோகலிங்கம்**

அவர்கள்

கண்டியில் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம். அவரின் பிரிவினால் துயருறுகின்ற குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மருத்துவபீட மாணவர்கள்
15 ஆம் அணி
(61394)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | மறைவு |
|---|---|
| 29 — 04 — 1940 | 29 — 12 — 1997 |

திருமதி
**கனகமணி மருதலிங்கம்**
திதி: 18 — 12 — 1998

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள்.

கனகசபை வீதி,
மானிப்பாய்.
(61404)

## உதவிப் பணம்

நெடுந்தீவுத் தபாலகம் ஊடாகவும் ஏனைய இரு உப-தபாலகங்கள் ஊடாகவும் பொதுசன மாதாந்த உதவிப்பணம்பெறுவோருக்கு டிசெம்பர் மாதத்துக்கான உதவிப் பணம் வழங்கப்படவுள்ளது. (இ)


**ஸ்ரீ செல்வா**
சினிமா
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
கமல், பானுப்பிரியா
நடித்த
மகராசன்
(நேரடி CD)
(61407)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
இன்று முதல்
பார்த்திபன், ரோஜா
நடித்த
புதுமைப் பித்தன்
திங்கள் முதல்
முரளி, ரம்பா,
விஜயகுமார், நாஷர்
நடித்த
தேசியகீதம்
தினசரி– 10. 30, 2. 30
(பழைய நேரம்)
T. P. No. 070–212223
(61369)

**ராஜா டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்.
ரஜனி, மீனா, ரோஜா
ஜனகராஜ், செந்தில்
நடித்த
வீரா
தினசரி
10.30, 2.00
சனி, ஞாயிறு
10-30, 2-00, 5-00
(சி/5711)

**நாகம்ஸ்**
சினிமா
சுன்னாகம்.
இன்று முதல் மீண்டும்
ரீல்ஸ் படம் ஆரம்பம்.
அஜித், தேவயானி,
மணிவண்ணன்
நடித்த
காதல்கோட்டை
காட்சிகள்: 10-30, 2-30
(61407)

எமது புதிய ஓடியோ
CD வெளியீடு!
காதல் கவிதை
யோலீஸ் கில்லாடி
ஹரிகரன் பாடல் தெரிவுகள்
உன்னி கிருஸ்ணன் பாடல் தெரிவுகள்
வீடியோ எக்கணமி
மியூசிக் கோணர்
பரமேஸ்வராச்சந்தி,
யாழ்ப்பாணம்.
[61408]


## மரண அறிவித்தல்கள்

திருமதி
**இராசையா சின்னம்மா**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சின்னம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், கனகராசா(வர்த்தகர், யாழ். மார்க்கற்), சண்முகராசா (சுவிஸ்), சந்திரலேகா, செல்வராஜா (யூ. சி., வவுனியா), காலஞ்சென்ற புஸ்பவல்லி, தருமராஜா (சுவிஸ்) ஆகியோரின் தாயாரும், தவஞானம், பாக்கியலட்சுமி (சுவிஸ்), நாகலிங்கம் (சாரதி, இ. போ. ச.), பொன்மணி (வவுனியா), திருநாவுக்கரசு (வவுனியா), தவலட்சுமி (வவுனியா) ஆகியோரின் மாமியாரும், கண்ணன் (கனடா), சிவசதீசன் (சுவிஸ்), மஞ்சுளா (கனடா), சுகுணா (கனடா), சியாமளா, சுதாகரன் (சுவிஸ்), சுபாஷினி (மல்லாவி), சுகந்தி (வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), சந்திரகுமார் (மக்கள் வங்கி, பரந்தன்), செல்வகுமார் (ஜேர்மனி), கோபிக்குமார்(வவுனியா), சிவபுஸ்பரூபன் (சுவிஸ்), சிவமாலா (சுவிஸ்), சிவமேனன் (ஜேர்மனி), சிவேந்திரன் (வவுனியா), தர்சலா, சோபிகா, வினோத், ஜீவிதா (வவுனியா) ஆகியோரின் பேர்த்தியும், சுருதி, கோகுல், தனுஷியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்நேற்று (17-12-98) வியாழக்கிழமை நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
இ. கனகராசா
(மகன்)

சிவன் வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(61386)

**இரத்தினம் நாகராசா**

அளவெட்டி வடக்கு
(இளைப்பாறிய பஸ் சாரதி கோண்டாவில்)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி வடக்கை வதிவிடமாகவும் தற்போது 206/2, பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் நாகராசா 17 - 12 - 98 இல் நேற்று வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பவானியின் அன்புக் கணவரும், மதிவண்ணன் (திட்டமிடல் வ. கி. மா., திருகோணமலை), வளர்மதி (கல்வித் திணைக்களம் வலயம் 2, கோப்பாய்), கதிர்வண்ணன் (தொழில் நுட்பக் கல்லூரி, திருகோணமலை), எழில்வண்ணன்(யா/இந்துக் கல்லூரி A/L 99) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பிரபாகரனின் (முல்லைத்தீவு) மைத்துனருமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18–12-98) வெள்ளிக்கிழமை நண்பகல் ஒரு மணியளவில் தற்போதைய அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. மதிவண்ணன்
(மகன்)

206/2, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.
(61403)

**தங்கராசா விமலேஸ்வரன்**

(அஞ்சலக ஊழியர்-முன்னாள் செயலாளர் நுணாவிற்குளம் கண்ணகை அம்பாள் கூட்டுப் பிரார்த்தனை சபை)

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த தங்கராசா விமலேஸ்வரன் அகாலமரணமானார்.

அன்னார் கந்தையா தங்கராசா, தங்கராசா நல்லம்மா அவர்களின் அன்புப் புதல்வரும் விக்னேஸ்வரன் (ஜேர்மனி), விமலேஸ்வரி (டென்மார்க்), விமலினி (டென்மார்க்), விமல்ராஜ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் தாட்சாயினி (ஜேர்மனி), ராதாகிருஸ்ணன் (டென்மார்க்), சிவநாதன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-12-98) வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் குச்சப்பிட்டி மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்;
க. தங்கராசா
(தந்தை)

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(61406)

# கேள்வி அறிவித்தல்

## தேசிய நீர் வழங்கல் சக வடிகாலமைப்புச் சபை,

பிராந்திய காரியாலயம், யாழ்ப்பாணம்.

கீழ்வரும் வேலைக்கான கேள்வி யாழ்ப்பாணம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் 1998 டிசெம்பர் மாதம் 29ஆம் திகதி பிற்பகல் 14.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். பெற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப் பத்திரங்கள் எமது அலுவலகத்தில் உடன் திறக்கப்படும்.

இதற்கு நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (ICTAD இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம் 9இலும் அதற்கு மேற்பட்ட தரத்திலும் உள்ள பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் தகுதியுடையவராவர். ஒப்பந்தகாரர் ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும், இற்றை வரை செய்யப்பட்ட வேலை ளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவேட்டைச் சமர்ப்பித்து, தகுதியுடைய ஒப்பந்தகாரர் உரிய கேள்வி வைப்புப் பணத்தை, 45/4, நாயன்மார் வீதியிலுள்ள பிராந்திய காரியாலயத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்,

| கேள்வி விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|
| ஊர்காவற்றுறை நீர் விநியோகத் திட்ட அல்லைப்பிட்டி வேலைத் தளத்தில் மின் பிறப்பாக்கிக் கட்டடம் அமைத்தல் | 11,350-00 | 250-00 |

கேள்விப் பத்திரங்களை 1998 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆந் திகதி பிற்பகல் 16-00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். இவை தொடர்பான மேலதிக விவரங்களை முகாமையாளர், தேசிய நீர் வழங்கல் சகவடிகாலமைப்புச் சபையின் பிராந்திய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

ஜி. ஜேசுதாசன்,
முகாமையாளர் (வடபிராந்தியம்)
தேசிய நீர் வழங்கல் சகவடிகாலமைப்புச் சபை.

45/4, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சி-5816)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கா—பிரிட்டன் இணைந்து

# முன்னறிவிப்பு ஏதும் இன்றி ஈராக் மீது குண்டு மாரி!

பக்தாத், (சி. என். என்)

**வளைகுடாவில் நிலை கொண்டுள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படைகள் இணைந்து முன்னறிவிப்பு ஏதும் இன்றி ஈராக் தலைநகர் பக்தாத் மீதும் வேறு சில இலக்குகள் மீதும் கடும் குண்டுமாரி பொழிந்துள்ளன.**

**இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை — சில மணிநேரங்கள் — தொடர்ச்சியாக நடத்தப்பட்ட இத் தாக்குதல்களினால் தலைநகர் பக்தாத்தில் பலத்த சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.**

முதற்கட்டமாக சுமார் 200 'குருஸ்' ஏவுகணைகள் கப்பல்களில் இருந்தும் சண்டை விமானங்களில் இருந்தும் ஏவப்பட்டதாக பென்ரகன் வட்டாரங்கள் முதலில் தெரிவித்தன.

ஈராக்கின் அணு மற்றும் இரசாயன உயிரியல் ஆயுத நிலையங்களை இலக்கு வைத்து இந்த ஏவுகணைகள் வீசப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது. 70 யுத்த விமானங்களைத் தாங்கிய 'யு. எஸ். எஸ் என்ரப்பிறைஸ்' என்ற விமானம் தாங்கிக் கப்பல் உட்பட 15 அமெரிக்கப் போர்க் கப்பல்களும் 97 விமானங்களும் பாரசீகக் குடாவில் உள்ளன, அத்துடன் ஆயுத தளபாடங்கள் சகிதம் 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட அமெரிக்கத் துருப்புக்களும் அப்பகுதியில் நிலைகொண்டுள்ளன.

பக்தாத் மீது இலகுவாக ஏவுகணைகளை வீசுவதற்காக எட்டு போர்க் கப்பல்கள் பாரசீக வளைகுடாவின் வட பகுதிக்கு நகர்த்தப்பட்டன என்றும்—

அவற்றில் இருந்தே 'குருஸ்' ஏவுகணைகள் ஏவப்பட்டதாகவும் அமெரிக்கப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதைவிட சுமார் 300 'குருஸ்' ஏவுகணைகளைச் சுமந்த 14 'பி–52' ரக குண்டு வீச்சு விமானங்கள் பிரிட்டிஷ் தீவான டியாகோ கார்சியாவில் இருந்து புறப்பட்டுச் சென்றதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈராக்கில் உள்ள இராணுவ மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய நிலைகள் மீது இரு நாடுகளின் படைகளும் இணைந்து கடும் தாக்குதலை நடத்தியிருப்பதாக அதிபர் பில் கிளின்ரன் தனது 'ஓவல்' அலுவலகத்தில் இருந்து நாட்டு மக்களுக்கு அறிவித்தார்.


''அணு மற்றும் நச்சு ஆயுதங்கள் மூலம் அயல் நாடுகளை அச்சுறுத்த சதாம் ஹுசேய்னை அனுமதிக்கமாட்டோம். ஐ. நா. ஆயுத பரிசோதனை விவகாரத்தில் ஒத்துழைப்பதற்கு சில வாரங்களுக்கு முன்பே அவருக்கு கடைசி அவகாசம் வழங்கி இருந்தோம். ஆனால் இதுவிடயத்தில் ஒத்துழைக்க ஈராக் மீண்டும் தவறிவிட்டதாக ஐ. நா. ஆயுத பரிசோதனைக் குழுவின் தலைவர் ரிச்சாட் பட்லர் அறிவித்துவிட்டார்'' என்றும் கிளின்ரன் தெரிவித்தார்.

''சதாமின் முடிவு அவர் மீது திரும்ப எதிரொலித்துள்ளது'' என்றும் கிளின்ரன் கூறினார்.

அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் மெடலின் அல்பிறைற் இத்தாக்குதல் பற்றிக் கருத்து வெளியிடுகையில் ''இது சதாம் ஹுசேய்னை வெளியேற்றுவதற்காக'' ஏற்பாடு செய்யப்பட்ட தாக்குதல் அல்ல என்று தெரிவித்தார்.

சதாம் அரசின் எதிரணிக் குழுக்களுடன் அமெரிக்கா தொடர்புகளை ஏற்படுத்த ஏற்பாடு செய்துள்ளது. சாத்தியமான வழியில் அவர்களுடன் இணைந்து செயற்படுகிறது என்றும் அவர் கூறினார்.

(ஐ)



பக்தாத் நகரம் மீது பொழியப்பட்ட 'குருஸ்' ஏவுகணைகள் எழுப்பிய ஒளிப் பிழம்புகள் இரவு வானை பிரகாசிக்கச் செய்தன. சீ. என். என். தொலைக்காட்சிக்காக நேற்று அதிகாலை எடுக்கப்பட்ட படங்கள் இவை.

வான்வழித் தாக்குதல்களை தொடர்ந்து பக்தாத்தில் இருந்து வெளி உலகுடனான சகல தொலைத் தொடர்புகளும் தடைப்பட்டுள்ளன.

அதிபர் சதாம் ஹுசேய்னின் மாளிகை ஒன்றுக்கு அருகிலும் சில ஏதுகணைகள் வீழ்ந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஐ)

# பெரும் வெடி ஓசைகளால் பக்தாத் நகரம் அதிர்ந்தது!

## கட்டடங்கள் நாசம்; சிவிலியன்கள் பலி!!

பக்தாத், டிசெ. 18

அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் படைகள் கூட்டாக நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களினால் தலைநகர் பக்தாத்தில் மோசமான சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இரவு வேளை அமைதியில் ஆழ்ந்திருந்த நகரம் சிலநிமிட நேரங்களுக்குள் யுத்த பூமியாக மாறியதாக அங்குள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இருண்ட வானைக் கிழித்துக் கொண்டு வந்த ஏவுகணைகள் நகரின் பல கட்டடங்கள் மீது அடுத்தடுத்து வீழ்ந்து பெரும் சத்தத்துடன் வெடித்தன. நகரின் பல பகுதிகளையும் புகை மண்டலம் சூழ்ந்து கொண்டது.

ஈராக் நேரப்படி இரவு சுமார் ஒரு மணி அளவில் முதலாவது வெடி ஓசை நகரை அதிர வைத்ததாக அங்கு தங்கியுள்ள சி. என். என். செய்தியாளர் தெரிவித்தார்.

ஏவுகணைகளையும் விமானங்களையும் நோக்கி தரையில் இருந்து விமான எதிர்ப்புப் பீரங்கிகளால் ஈராக்கியப் படைகள் பதில் தாக்குதல் நடத்தின.

வானில் செம்மஞ்சல் நிற ஒளிப்பிளம்புகள் அங்கும் இங்குமாகச் சிதறின. புகை மண்டலம் சூழ்ந்து கொண்டது.

நகரில் எந்தெந்த இலக்குகள் தாக்கப்பட்டன என்ற தெளிவான தகவல்கள் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

தூக்கத்தில் இருந்த நகர மக்கள் வெடி ஓசைகளால் பீதியடைந்து பதுங்குகுழிகளில் தஞ்சமடைந்ததாகவும் பெரும் எண்ணிக்கையான மக்கள் கட்டடங்களை விட்டு வெளியேறி தெருக்களில் ஓடிச் சென்றதைக் கண்டதாகவும் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

(ஐ)

## 45 ஈராக்கியர் பலி! 200 பேர் காயம்!!

பக்தாத், டிசெ. 18

குடியிருப்புப் பகுதி ஒன்றை ஏவுகணை தாக்கியதில் குறைந்தது 45 பொதுமக்கள் உயிரிழந்ததாகவும், 200 பேர் காயமடைந்ததாகவும்பக்தாத்மருத்துவமனை வட்டாரங்களில் இருந்து வெளியான முதல் தகவல்கள் தெரிவித்தன.

உயிரிழப்புக்கள் இன்னும் அதிகமாக இருக்கும் என்று அஞ்சப்பட்டது.

இதேவேளை —

பக்தாத்துக்கு வெளியே தாக்குதலுக்கு இலக்கான இடங்களில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடியாகத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (ஐ)

# நாட்டைப் பாதுகாக்க அணி திரளுங்கள்!

## மக்களுக்கு சதாம் அழைப்பு

பக்தாத், டிசெ. 18

''தாய் நாட்டைப் பாதுகாக்க அணிதிரளுங்கள்'' என்று அதிபர் சதாம் ஹுசேய்ன் ஈராக் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பல கட்டடங்கள் சேதமடைந்திருப்பதை அவர் ஒப்புக் கொண்டிருப்பதாக சீ. என். என். தெரிவித்தது.

தாக்குதல் தொடங்கிய கையோடு ஈராக்கின்அதிகார பூர்வ செய்தி நிறுவனமான 'இர்னா, அறிக்கை ஒன்றை வெளியிட்டது

''அப்பாவி மக்களின் பல இலக்குகள் தாக்கப்பட்டுள்ளன. உங்கள் அதி உயர்ந்த தாய் மண்ணில் குண்டுகள் வீழ்கின்றன. சிந்தியுங்கள்... உங்கள் பங்களிப்பு நாட்டுக்கு அவசியமாகின்றது; எதிரிகளுக்கு உங்கள் எதிர்ப்பைப் பலமாகக் காட்டுங்கள்... உங்களுக்கு வெற்றி கிட்ட ஆண்டவர் உதவட்டும்...'' — என்று அந்த அறிக்கை மூலம் நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்தார் அதிபர் சதாம்.

உலக அரங்கில்

## தாக்குதலுக்குப் பெயர் 'பாலைவன நரி'

லண்டன், (சீ. என். என்.)

அமெரிக்காவும், பிரிட்டனும் ஈராக் மீது கூட்டாக நடத்தி இருக்கும் தாக்குதலுக்கு 'பாலைவன நரி' (Operation Desert Fox) எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

தாக்குதல் ஆரம்பித்த பின்னர் டவுணிங் வீதி இல்லத்துக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய பிரிட்டிஷ் பிரதமர் பிளயர் இத்தாக்குதல் மிகவும் அவசியமானது என்று கூறினார்.

''உறுதிமொழிகளைத் தொடர்ச்சியாக மீறிய மனிதர்'' என்று சதாம் ஹுசெய்னை அவர் வர்ணித்தார்.

''ஈராக்கிய மக்களுடன் பிரிட்டனுக்கு எந்த சச்சரவும் இல்லை. பொதுமக்களுக்கு ஏற்படக் கூடிய சேதங்களைத் தவிர்க்க சாத்தியமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன'' என்றும் பிளயர் தெரிவித்தார்.

(ஐ)

# பெரும் போர் மூளும் நிலை!

நியூயோர்க், டிசெ. 18

**அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து ஈராக் மீது நடத்தியுள்ள வான் வழித் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்குமாறு ஈராக் அதிபர் சதாம் ஹுசேய்ன் தனது முப்படைகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.**

**இதனையடுத்து வளைகுடாவில் பெரும் போர் எந்நேரமும் வெடிக்கலாம் என அஞ்சப் படுகிறது.**

ஈராக் மீதான தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு பல உலக நாடுகள் — அவசர வேண்டுகோள்களை விடுத்து வருகின்றன.

பதில் நடவடிக்கையாக ஈராக்கியப் படைகள் குவைற் மீது தாக்குதல் நடத்தினால் பெரும் போர் வெடிக்கும் என அஞ்சப்படுகிறது,

'உலகம் முழுவதுக்கும் இது ஒரு சோகமான நாள்' என்று ஐ. நா. செயலர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VIMALAS TELE COMUNICATION

விமலாஸ் தொலைத் தொடர்பு

உள்ளூர், வெளிநாடுகளுக்கான தொலைத் தொடர்புகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

விமலாஸ் தொலைத் தொடர்பு
இல. 4, நவீனசந்தை, மேல்மாடி,
சாவகச்சேரி.

தொலைபேசி இலக்கம்:
உள்ளூர் — 070 - 212304
வெளிநாடு — 0094 - 70 - 212304
(சி/5815)


## ஜெனரேற்றர் வந்தது

தென்மராட்சி, டிசெ 18 சாவகச்சேரி நகர்ப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்காக 500 கே. வி. வலுவுடைய ஜெனரேற்றர் ஒன்று வந்துள்ளது.

இந்த ஜெனரேற்றர் பொருத்தப்பட்டதும் மின் பாவனையாளர்களுக்கு தினமும் முன்னரைப் போல் நான்கு மணித்தியாலம் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

தற்போது 250 கே. வி. வலுவுடைய ஜெனரேற்றர் மூலம் ஒன்று விட்டு ஒருநாள் பாவனையாளர்களுக்கு மின்சாரம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஜ-117)


பலரின் வேண்டுகோளுக்கிணங்க

யாழ். நகரில்
பயிற்சி வகுப்பு

S.L.A.S திறந்த போட்டிப் பரீட்சை
பெப்ரவரி 1999

பொது விவேகம் / கட்டுரையும் சுருக்கமும் — KT பிரபாகரன் BA; PG. Dip in Public Admin.
பொது அறிவு - பலதுறைசார் விரிவுரையாளர்கள்
காலம்: 19 - 12 - 98 சனி பி. ப 2.00 மணி
(வகுப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் நடைபெறும்)

மேலதிக விவரங்களுக்கு:
உதவிப் பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
ஸ்ரான்லிவீதி, (மக்கள் வங்கி அருகில்)
யாழ்ப்பாணம். (61393)


உ
சிவமயம்

கலாபூஷண விருதுபெற்ற தவில்மாமேதை

## கைதடி பழனிமலை அவர்களுக்கான

# பாராட்டு விழா

♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥



இடம்: யா/ மட்டுவில் தெற்கு அமெ. அ. த. க. பாடசாலை
காலம்: 19 - 12 - 1998 சனிக்கிழமை பி. ப. 1-30 மணி
தலைமை: திரு. சி. கந்தசாமி (ஓய்வுபெற்ற கி. உ.) (விழாக்குழுத் தலைவர்)

பிரதம விருந்தினர்: பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் (தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்: திரு. பு. சுந்தரம்பிள்ளை (பிரதேச செயலர், தென்மராட்சி)
ஆசியுரை: சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள்
பாராட்டுரை: திரு. க. துரைரத்தினம் (அதிபர், யா/ அமெ. அ. த. க. பாடசாலை)
திரு. க. வாமதேவன் (கிராம உத்தியோகத்தர், மட்டுவில் மத்தி)
நன்றியுரை: திரு. க. க. ஈஸ்வரன் (விழாக்குழுச் செயலர்) (செயலாளர், மட்டுவில் இந்து இளைஞர் மன்றம்)

கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

இவ்விழாவில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்!

விழாக்குழு,
மட்டுவில்.


விழா சிறப்புற வாழ்த்துவோர்:

வாணி ரெக்ஸ்

இல. 11, நவீனசந்தை
உட்புறம்
சாவகச்சேரி.

இல. 5, மேல்மாடி,
சாவகச்சேரி.



ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
நீர்வேலி

இன்று முதல் கீழ்வரும் மகத்தான சேவைகளை எம் மக்களுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் நவீன தொலைத் தொடர்பு சாதனங்கள் ஊடாக எதுவித தாமதமும் இன்றி உடனுக்குடன் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வோம்.

1) உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்பு.
2) பக்ஸ்.
3) போட்டோ கொப்பி.
4) வெளிநாடு செல்வதற்கான ஒழுங்குகள், விமான ரிக்கட் ஒழுங்குகள்.

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்,
(கந்தசாமி கோயில் வடக்கு வீதி)
நீர்வேலி தெற்கு,
தொலைபேசி இல. 070 - 212354
பக்ஸ் இல. 070 - 212354
[61385]


## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும்



அமரர்

### செல்லையா தம்பிராசா

மீசாலை
(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி திணைக்கள எழுதுவினைஞர்)

19 – 11 – 1998 இல் செல்லையா தம்பிராசா கொழும்பில் சிவபதமெய்தினார். அன்னாரின் மறைவினால் ஏற்பட்டதுயரத்தில் எம்முடன் நேரிலும், தொலைபேசி, தபால் மூலமும் தொடர்புகொண்டு எமக்கு ஆறுதல் பகன்றவர்களுக்கும் ஆதரவு தந்து அரவணைத்தவர்களுக்கும் மற்றும் சுகவீனமுற்ற காலத்தில் உதவிபுரிந்த அனைவருக்கும், எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது இல்லத்தில் — 18 - 12 - 1998 இல் அந்தியேட்டிக்கிரியைகளும் 19 - 12 - 1998 அன்று வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும், மதிய போசனமும் நடைபெறும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

தலைவன் பிரிவால் துயருறும்:
மனைவி: கமலாதேவி தம்பிராசா
(C - 21/1/2, சொய்சாபுர, மொறட்டுவ
மக்கள்: யோகச்சந்திரன் (ஜேர்மனி)
ஜெகன் மோகன் (ஜேர்மனி)
கலைச்செல்வன் (கனடா)
கலைச்செல்வி (கொழும்பு)
மருமகன்: சந்திரகுமார் (கொழும்பு)
(சி/5814)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
02 — 02 — 1977

உதிர்வு
23 — 12 — 1992

செல்வி
### காந்தரூபி மகேந்திரன்
( நந்தினி )

திதி: 18 - 12 - 1998

முற்றத்து மல்லிகையாய்
மணம் பரப்பிய மலரே!
நீ உதிர்ந்து ஆறு ஆண்டுகளா?
நம்பமுடியவில்லை.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உனது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அப்பம்மா, அண்ணா,
அண்ணி, தங்கை, மருமகன்,
மற்றும் உற்றார், உறவினர்.

நவாலி அரசடி, மானிப்பாய். (61379)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
21 — 10 — 1948

மறைவு
18 — 11 — 1998

### அமரர் பிள்ளையான் சிவபாலசுந்தரம்
(பொறியியலாளர், B.Sc. ENGINEERING, LONDON)

18-11-98 இல் சென்னையில் காலமான பிள்ளையான் சிவபாலசுந்தரம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியையும் மதிய போசன நிகழ்வும் இன்று (18-12-98) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மன்னாரைப் பிறப்பிடமாகவும் அனலைதீவை வசிப்பிடமாகக் கொண்டவரும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும் சென்னையில் வசித்தவருமான பிள்ளையான் சிவபாலசுந்தரம் அவர்கள் 18-11-98 புதன்கிழமை மாரடைப்பால் சென்னையில் காலமானார்.

அன்னார் மாகியப்பிட்டி சண்டிலிப்பாயைச் சேர்ந்த பிள்ளையான் சரஸ்வதி தம்பதிகளின் மூத்த புதல்வரும் சென்னையைச் சேர்ந்த திரு. திருமதி சிங்கராஜ செட்டியார் அவர்களின் மருமகனும், கஸ்தூரியின் (சென்னை) அன்புக் கணவரும் திவாகர், மனோஜ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகையா (பிரசன்னா என்ரபிறைஸ் பிறைவேற் லிமிட்டெட், கொழும்பு), குணரெத்தினம் (உரும்பிராய்), சிவபாக்கியம் (சென்னை), செல்வநாயகம் (லங்கா சிமெந்து லிமிட்டெட்), கமலாதேவி (கொழும்பு), நிர்மலாதேவி (அரியாலை), இந்திராதேவி, விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜேஸ்வரி(கொழும்பு), இந்திராணி, மோகனசுந்தரம் (சென்னை), கலா, ரவீந்திரகுமார் (கொழும்பு), தர்மகுலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் பிறேம்ஆனந்த், ஹரிகரன், சுதர்சினி(கொழும்பு), ஹரிராஜ், பிரியா ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஹம்சலேகா, சுதாகர் (சென்னை), நீராஜா ஆகியோரின் மூத்த மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19-11-98 அன்று சென்னையில் நடைபெற்றன என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**வேலன் பிள்ளையான்**
(தகப்பன்)

''சரஸ்வதி வாசம்''
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய். (61322)

# தொண்டமானை ஆதரித்து தொடர்ந்து மலையகத்தில் ஆர்ப்பாட்டங்கள்

கொழும்பு, டிசெ. 18

அமைச்சர் தொண்டமானால் சமர்ப்பிக்கப்பட்ட பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டை ஐ. தே. கட்சி தோல்வியடையச் செய்ததை எதிர்த்து மலையகப் பகுதியில் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், சத்தியாக்கிரகங்கள் என்பன நேற்றும் இடம்பெற்றன.

ஹற்றன், கொட்டகலபத்தன, தலவாக்கல, டிக்கோயா பகுதிகளைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் இந்தப் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

பல இடங்களில் ஐ. தே. க. தலைவர்களின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் போராட்டங்களில் இலங்கைத்தொழிலாளர்காங்கிரஸின் உப தலைவர் எஸ். ஐ. கந்தசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆறுமுகம் தொண்டமான், முத்து சிவலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து இப்போராட்டங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் பொதுவாழ்வில் இருந்து தம்மை எவரும் ஒழித்து விட முடியாது என்றும்— தாம் தொழிலாளர்களின் உரிமைக்காகவே போராடி வந்திருப்பதாகவும்—

அது ஒரு நீண்ட பயணம் என்றும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நிதி திட்டமிடல் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு தொழிற் சங்கம் மட்டுமல்ல அது ஓர் அரசியல் கட்சியாகவும் அரசாங்கத்தின் ஓர் அங்கமாகவும் விளங்குகின்றது.

கடந்த காலத்தில் ஒடுக்கப்பட்டிருந்த ஓர் சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஒரு புதிய அமைச்சை உருவாக்கி அதற்கென நிதியை ஒதுக்கும் துணிவை ஜனாதிபதி பெற்றிருந்தார்.

150 ஆண்டு காலமாக ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த நிலைமையைப் போக்குவதற்குக் குறைந்தது 10 ஆண்டுகளாவது தேவை.

இப்படி அவர் கூறினார். (இ-6)

## சாவகச்சேரியில் திரிபோஷா விநியோகம்

சாவகச்சேரி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு திரிபோஷா மா எடுத்து வரப்பட்டுள்ளது.

திரிபோஷா மா நேற்று புதன் தொடக்கம் சாவகச்சேரி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் இயங்கும் தாய் சேய் பராமரிப்பு நிலையங்களுக்கு எடுத்து வரப்பட்டு வழங்கப்படுகிறது.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் திரிபோஷா மா வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (இ-31)

## மாயக்கை சந்தைக்கு புதிதாக கடைகள்

பருத்தித்துறை, டிசெ. 18

புலோலி மாயக்கை பொதுச் சந்தையில் இரண்டு புதிய கடைகள் அமைக்கப்படவுள்ளன.

இப் பொதுச் சந்தையில் நீண்டகாலமாக தற்காலிக தகரக்கடைகளே இருந்து வருகின்றன.

சுமார் இரண்டு இலட்சம் ரூபா செலவில் புதிய கடைகளை அமைக்க பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-118)

## தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 18

செஞ்சிலுவை சர்வதேசக் கப்பலில் 116 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இவற்றைப் பிரித்து விநியோகிக்கும் வேலைகள் நேற்று ஆரம்பமாகின. (இ-139)

## தராசுகளுக்கு முத்திரையிடல்

கொழும்புத்துறை, டிசெ. 18

பளைப்பிரதேசசபை செயலகத்தில் இன்று வெள்ளிக்கிழமையும் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கள், 22 ஆம் திகதி செவ்வாய் ஆகிய நாள்களிலும் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி நடைபெறும்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இப்பகுதியில் உள்ள சகல சந்தை வியாபாரிகள், கடை உரிமையாளர்கள், மில் உரிமையாளர்கள், விறகு காலையைச் சேர்ந்தவர்கள் தத்தமது தராசுப்படிகளுக்கும் நிறுவை அளவை உபகரணங்களுக்கும் தவறாது முத்திரையிட்டுக் கொள்ளுமாறு யாழ். செயலக நிறுவை, அளவைத் திணைக்களப் பொறுப்பதிகாரி கா. நாகலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-30)

## 8 கிளைகள் இயங்க இன்னும் அனுமதி இல்லை

வடமராட்சி பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் 8 கிளைகளை இயக்க இதுவரை அனுமதி கிடைக்காததால் தற்போது 14 கிளைகள் மட்டுமே இயங்குகின்றன. இதனால் அங்கத்தவர்கள், தொழிலாளர்கள் என பலரும் பாதிப்படைந்துள்ளனர் என பருத்தித்துறை பனை தென்னைவள அபிவிருத்திச் சங்க பொது முகாமையாளர் வ. இராசலிங்கம் தெரிவித்தார்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் சங்கத்தின் 22 கிளைகள் இயங்கியதாகவும்—

இவற்றில் வடமராட்சி கிழக்கில் தற்போது விளாங்காடு பகுதியில் மட்டும் ஒரு கிளை இயங்குவதாகவும்.

நாகர் கோயில், அம்பன், குடத்தனை, மணல்காடு வேம்படி கிளைகள் உட்பட 8 கிளைகள் இயங்க அனுமதி கிடைக்கவில்லை எனவும்—

இதனால் சீவல் தொழிலாளர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (இ-36)

## அராலி தெற்கு
## நீர் விநியோகத் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படும்

வட்டுக்கோட்டை, டிசெ. 18

அராலி தெற்கு நீர் விநியோகத் திட்டம் மேலும் சில பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது

மேற்படி குடி தண்ணீர் விநியோகத்திட்ட புனரமைப்பு வேலைகளை மேற்கொண்ட ஜேர்மன் தொழில் நுட்ப கூட்டமைப்பு நிறுவனம் குடி தண்ணீர் பெறுவதற்கு மிகவும் கஷ்டப்படும் சிலபகுதிகளைத் தெரிவு செய்து விஸ்தரிப்புக்குத் தேவையான பொருள்களை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்ததனைத் தொடர்ந்து விஸ்தரிப்புக்கான ஆரம்ப வேலைகள் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை ஊழியர்களின் ஆலோசனையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-12)

## சங்கானையில் முதற் கட்ட கொடுப்பனவாக ரூ. 5,000

வட்டுக்கோட்டை, டிசெ. 18

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்பதற்காக வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவில் முதற் கட்ட கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபா மேலும் 170 பேருக்கு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டது.

மாதம் ஆயிரத்து 500 ரூபாவிற்குக் குறைந்த வருமானம் பெறும் இக்குடும்பங்கள். வீடுகளை புனரமைப்புச்செய்வதற்கு நான்கு கட்டங்களாக கொடுப்பனவு செய்யப்படவுள்ளது. (இ-12)

## யாழ். ஆஸ்பத்திரி
## 5 மாடிக் கட்டட வேலை மீண்டும் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், டிசெ. 18

நிதி ஒதுக்கீடு இடைநிறுத்தி வைக்கப்பட்டு, கட்டட வேலைகள் அரைகுறையாக இருந்து வரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் புதிய ஐந்து மாடிக்கட்டட வேலைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. அபிவிருத்தித்திட்டம் இப்பணியை மேற்கொள்ளவுள்ளது.

மிகக்குறுகிய காலத்தில் இக்கட்டடத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கில் வேலைகளை ஆரம்பிப்பதற்கு ஒத்துழைப்பு தரும்படி ஆஸ்பத்திரி நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டதற்கமைய ஆஸ்பத்திரி நிர்வாகம் அக்கட்டடத்தினுள் இருக்கும் பொருள்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அப்புறப்படுத்தும் பணிமுடிவடைந்ததும் கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படும். (இ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய-இல. ஒப்பந்தம் மறுபரிசீலனை இல்லை

## ஜஸ்வந்த்சிங் தெரிவிப்பு

புதுடில்லி, டிசெ.18

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்யும் யோசனைகள் எதுவும் இந்திய அரசாங்கத்துக்கு இல்லை என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த்சிங் தெரிவித்துள்ளார்.

கடந்தபுதன்மக்களவையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-6)

# அச்சுவேலிக்கு முழு அளவில் மின்சாரம் வழங்க கோரிக்கை

அச்சுவேலி, டிசெ. 18

அச்சுவேலிப் பகுதிக்கு முழுமையாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அச்சுவேலி அபிவிருத்திக்குழு மின்சார சபையைக் கேட்டுள்ளது.

அச்சுவேலிப் பகுதியில் மக்கள் முழுமையாக குடியேறிய போதிலும் எல்லோருக்கும் மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை.

மின்சார இணைப்புக்கோரி விண்ணப்பித்த நூற்றுக் கணக்கான பாவனையாளர் எப்போது மின்சாரம் கிடைக்கும் என காத்திருந்து ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

அச்சுவேலிப் பகுதியில் பிரதான வீதி ஓரத்தில் உள்ள குறிப்பிட்ட எண்ணிக்கையான வீடுகளுக்கு மட்டும் மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. (இ-11)


## பாதணிகள் கண்காட்சியும் விற்பனையும்

காலம்: 19 - 12 - 98, 20 - 12 - 98
(முற்பகல் 10.00 -- பிற்பகல் 5.00)

இடம்: இ. செ. சி. சங்க
யாழ். கிளைத் தலைமையகம்

திரு. க. சண்முகநாதன் அவர்கள்
(அரச அதிபர், யாழ்ப்பாணம்)
கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்கள்.

வதிரி தோல்பொருள் பயிற்சி நிலையத்தில் உற்பத்தியாக்கப்பட்ட தரம் மிக்க அழகான, நீடித்து உழைக்கக்கூடிய பாதணிகள், பாடசாலை தோற்பைகள் என்பன கண்காட்சிக்கும் விற்பனைக்கும் உள்ளன.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம் இலவசம்

கௌரவ செயலாளர்,
இ. செ. சி. சங்கம், யாழ். கிளை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/5812)


# நீதிபரிபாலனத்துறையில் தலையீடு இருக்கமாட்டாது

## ஜனாதிபதி உறுதி மொழி

நீதி பரிபாலனத் துறையில் அரசாங்கமோ அதன் தலைவர்களோ மற்றும் உயர் அதிகாரிகளோ தலையிடமாட்டார்கள் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நீதித்துறைச் சேவைகள் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய போது ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

நீதித்துறையின் சுதந்திரம், கௌரவம் ஆகியவற்றில் எந்தவிதத் தலையீடும் இருக்கமாட்டாது.

நாட்டின் ஜனநாயக முறையைப் பாதுகாப்பதற்கு நீதித்துறையின் சுதந்திரம் இன்றியமையாதது.

நாட்டின் நீதி பரிபாலனத்துறை ஜனநாயக ஆட்சியில் முக்கிய அம்சமாக உள்ளது. நீதித்துறை இல்லாவிடில் நாட்டின் ஜனநாயகம் சீரழிந்து விடும்; அத்துடன் அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்தின் சட்டப்படியான நிலைப்பாட்டுக்கும் பாதிப்பு ஏற்படும்.

நீதித்துறை மூலமாகவே பிரச்சினைகளை அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு அமைய நாகரிகமான முறையில் தீர்த்து வைக்க முடியும். நீதிபதிகள் அச்சமோ பாகுபாடோ இன்றி செயல்பட வேண்டும்.

நீதிச் சேவையைச்சேர்ந்த எந்தவொரு உறுப்பினருக்கும்தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ ஊறு விளைவிக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை. இதை உறுதிப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம்மேற்கொண்டுள்ளது.

மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு பல நிறுவனங்களையும் ஆணைக் குழுக்களையும் அரசாங்கம் ஏற்கனவே நியமித்துள்ளது.

இப்படி ஜனாதிபதி கூறினார். [இ-6]


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புவனேஸ்ரி கிருஷ்ணசிங்கம்

தோற்றம்: 29 - 08 - 1944
மறைவு: 18 - 12 - 1996

சிரித்து மகிழ்ந்து சீராட்டி வளர்த்த தாயை
எரியிட்டு இன்றோடு ஈராண்டு ஆனதுவாம்
மரித்துவிட்டீர் அம்மாநீர் என்றுநாம் நம்ப
மனத்துக்கோ தைரியம்தான் முளைக்கவில்லை
இன்னும்.

வேண்டிய சிறப்பெல்லாம் விரைவில் கிடைக்க
வான்தாண்டிச் சென்றுவாழ வழியமைத்துத் தந்தீர்!
ஈண்டுநாம் இருக்கும்நிலை கண்டு களிப்படைய
காலனும்மை விடாது கடுவிரைவில் கவர்ந்தானே!

தாயாக நீரெமக்குக் கிடைத்ததனால் மகிழ்ந்த எம்மை
தீயாகச் சுட்டதுவே உந்தனின் திடீர்மரணம்!
ஓயாத கவலையுடன் உழல்கின்றோம் என்செய்வோம்?
இயற்கையே மரணமென்று இதயங்கள் தேறிடுவோம்!

சாந்தி! சாந்தி! சாந்தி!

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், அக்கா, மைத்துனர்,
அவர்களின் பிள்ளைகள்.

விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

நோர்வே தொலைபேசி இலக்கங்கள்; 22321004
67591787

(61024)


# உள்ளூர் பாதணிகள் கண்காட்சிக்கு

யாழ்ப்பாணம், டிசெ.18

வதிரி தோற் பொருள் உற்பத்திச் சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பாதணிகளின் கண்காட்சி நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் நடைபெறும்.

ஐ.நா அபிவிருத்தித் திட்ட நிதி உதவியுடன் இயங்கி வரும் வதிரி தோல் உற்பத்தி நிலையத்தில் இங்கு கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு கடந்த 6 மாத காலத்தில் தயாரிக்கப்பட்ட பாதணிகள் காட்சிக்கு வைக்கப்படுவதுடன் விற்பனையும் இடம்பெறும்.

நாளை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இக் கண்காட்சியை யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் ஆரம்பித்துவைப்பார். இந்த நிகழ்வில் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள். (இ-6)

# மறவன்புலோவில் சிகிச்சை

மறவன்புலோவில் வசிக்கும் மக்களின் நலன் கருதி கைதடி அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிடாக்டர்என். சண்முகரத்தினம் இம்மாதம் தொடக்கம் ஒவ்வொரு திங்கட்கிழமையும் பிற்பகல் அங்கு சென்று நோயாளர்களுக்கு சிகிச்சையளித்து வருகின்றார்.

மறவன்புலோவிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் இந்தச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (இ-135)

# நைல்ஸ் ஞாபகார்த்த விளையாட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் கலாநிதி நைல்ஸ் ஞாபகார்த்தமாக மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டுக கழகம் நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் கல்லூரி உள்ளக விளையாட்டுக் கழகத்தால் கோரப்பட்டுள்ளன.

சதுரங்கம், பூப்பந்தாட்டம், மேசைப் பந்தாட்டம் ஆகிய போட்டிகளுக்கே விண்ணப்பப் படிவங்களை இன்று முதல் கல்லூரியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (இ-6)

# நாவாந்துறை கடற்கரை வீதி திருத்தப்படுகிறது

சேதமடைந்து குண்டும் குழியுமாகக் காணப்பட்ட நாவாந்துறை கடற்கரை வீதி தற்போது திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது.

காக்கைதீவில் இருந்து கொட்டடிப் பிள்ளையார் கோயில் வரையுள்ள பகுதி வீதி அதிகார சபையினால் தற்போது திருத்தியமைக்கப்படுகிறது. (இ-51)

## கல்வியங்காடு

# விளையாட்டரங்க வீதிக்கு மின் இணைப்பு இல்லை

யாழ்ப்பாணம், டிசெ. 18

கல்வியங்காட்டில் உள்ள விளையாட்டரங்க வீதி கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

இதனால் இவ்வீதியூடாக நீர்வேலி மற்றும் கோப்பாய், இருபாலைப் பகுதிகளில் இருந்து திருநெல்வேலிச் சந்தைக்கு பொருள்களைக் கொண்டுவரும் விவசாயிகளும் மற்றும் மாணவர்கள், பொது மக்கள் பலரும் பல இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மேற்படி வீதியில் தேங்கியுள்ள வெள்ளம் அவ் வீதியூடான போக்குவரத்தை தற்போது பெரிதும் பாதித்துள்ளது.

இதேவேளை் விளையாட்டரங்க வீதிப்பகுதிக்கு இதுவரை மின் விநியோகமும் வழங்கப்படவில்லை. அதேவேளை மின்விநியோகத்தை வழங்குவதற்குரிய ஆரம்ப கட்டவேலைகளும் செய்யப்படவில்லை.

மேற்படி வீதியினைத் திருத்த வேண்டிய அவசியம் குறித்தும், இப்பகுதிக்கான மின் விநியோகத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு கோரியும்கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையத்தினர் கோப்பாய்ப் பிரதேச சபைதலைவர், வலி. கிழக்கு பிரதேச செயலர் மற்றும் இருபாலைப் பகுதி ஈ.பி.டி.பி. பொறுப்பாளர்ஆகியோருக்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர். (ஐ- 7)

# வீதி அடையாளங்கள் பொறிப்பு

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பிரதான வீதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளின் முன்பாக மாணவர்கள் வீதியைக் கடப்பதற்கான அடையாளக்குறி இடப்பட்டுள்ளது.

வீதியில் அடையாளம் இடப்பட்டுள்ளதுடன் வீதியின் இருமருங்கிலும் சைகைக் [illegible] ளன. (ஐ-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தறுக்கணிக்க விடலாமா?

வலிகாமத்தில் பல பாடசாலைகளில் மாணவர்கள் கிடுகுக் கொட்டில்களின் கீழிருந்து படிக்கிறார்கள். அமர்ந்திருந்து படிக்க கதிரைகள் வாங்குகள் இல்லை. இதனால் பல மாணவர்கள் நிலத்திலிருந்தேபடிக்கிறார்கள். இந்த நிலையை நீக்க முடியாது கல்வித் திணைக்களம்திண்டாடுகின்றது.

இன்றைய குடாநாட்டு மாணவர்களுக்கு கிடைக்கும் கல்வி வசதிகள் வளங்களை மேற்கண்டவாறு புட்டுக் காட்டியிருப்பவர் வடமராட்சிக் கல்வி வலயத்தின் பணிப்பாளர் சி. சிவராசா.

இவர் அண்மைக் காலம் வரை, வலிகாமம் பிரதேசமும் உள்ளடங்கிய முந்திய வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளராகப் பதவி வகித்தவர். தாம் கண்டதை, அறிந்ததைத் துணிச்சலாக எடுத்துக் கூறியுள்ளார்.

அவரது இந்த ஆணித்தரமான தகவல் யாழ்ப்பாணத்து இளஞ்சந்ததியினரின் கல்வி வளர்ச்சியில் அக்கறையுள்ள சமூகப்பற்றுள்ள எல்லோரின் கவனத்தையும் ஈர்க்க வேண்டிய ஒன்றாகும்.

வலிகாமம் பிரதேசத்தில் மட்டுமன்றி யாழ். மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களிலும் கல்வி வசதிகளும் வளங்களும் மிகவும் தேய்ந்து போயுள்ளன என்பதே யதார்த்தம்.

சுமார் பத்து வருடங்களுக்கு முந்திய நிலையோடு ஒப்பிடும்போது குடாநாட்டில் இன்றுள்ள கல்வி வசதி பத்துப் பதினைந்து வீதமேனும் இருக்குமோ என்பது சந்தேகமே. ஆனால் பாடசாலைக் கல்வித்துறையில் இன்றுள்ள போட்டியும் சிரமங்களுமே அதிகம். அவற்றை ஈடுசெய்யும் வகையில் பெருகவேண்டிய கல்விக்கான வளங்கள் தேய்ந்து கொண்டு போவது தடுக்கப்படவேண்டும். இல்லையேல் எமது கல்வி வளர்ச்சி கண்ணுக்குப் புலப்படாமலே தறுக்கணித்து விடும்.

கொழும்பு அரசாங்கங்கள் தமிழர்களின் கல்வி வளர்ச்சியை நறுக்கத் திட்டமிட்டு, அவர்களுக்குரிய சமவாய்ப்புவசதிகளை வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் துண்டித்தமை வரலாறு. அதற்குப் பின்னர் வந்த போர்ச் சூழல் அவர்களின் நோக்கத்தை பெரிய அளவில் நிறைவேற்றஉரிய சந்தர்ப்பமாயிற்று.

கல்வி வளர்ச்சிக்குத் தேவையான சகல வளங்களும் அடிமட்டத்துக்குப் போன நிலையில் இருந்து மீட்சி பெறுவதற்கு, தமிழர்களுக்கெனத் தனியரசு அமைந்தால், சுயாட்சி வந்தால் அன்றி முழு அளவில் சாத்தியமில்லை.

அதுவரை அரசாங்கத்தை மட்டுமே நம்பியிருந்து அதள பாதாளத்துக்குப் போக நினைக்கலாகாது. எமது முதாதையர் போன்று ஏனைய செலவுகளைச் சுருக்கி கல்வி வளத்தை நாமே சுயமாகப் பெருக்க வேண்டும். நிதி மிகுந்தவர் இதற்கு துணை புரிய வேண்டும். வெளிநாடுகளில் உள்ள எமது உறவுகளின் உதவியை நாடிப் பெற்று கல்விப் பயிரை வளர்க்க முன்வர வேண்டும்- திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். முயற்சியே நற்பயன் விளைக்கும்.

# எம்மைப் பீடித்துள்ள மலங்கள் நீங்கி ஞான ஒளிபெற்று விழிப்படைவோம்

**ஞானக் கதிர்**

மார்கழி மாதம் இறைவனை வழிபடுவதற்கு உகந்த சிறப்புக்குரிய மாதமாகும். இறைபக்தியில் எம்மை ஈடுபடுத்தும் இயற்கைத் தன்மை இம்மாதத்துக்கு உண்டு. லௌகிக நிகழ்ச்சிகளை நீக்கித் தனியாக இறைவழிபாட்டுக்குரிய மாதமாக மார்கழி மாதம் திகழ்கிறது.

சிவனுக்குரிய திருவாதிரைத் திருநாளும் இம் மார்கழியிலேயேஅனுஷ்டிக்கப்படுகிறது.

திருஞான சம்பந்தர் பூம்பாவையை எழுப்புகின்றபோது ஆதிரை நாட் பெருமையைத் திருப்பதிகத்தில் அமைத்துப் பாடியுள்ளார். பகவத் கீதையில் ''மாதங்களில் நான் மார்கழியாகவுள்ளேன்'' எனக் கிருஷ்ண பரமாத்மா கூறியுள்ளார்.

சிவவிரதமான திருவெம்பாவையும், விஷ்ணு விரதமான ஏகாதசியும் சேர்ந்து இந்துக்களின் சிறந்த வழிபாட்டுமாதமாக மார்கழி மாதம் அமைகின்றது. பூமியில் ஒரு வருட காலம் தேவர்களுக்கு ஒரு நாளாக அமைகிறது. தேவர்களுக்குத் தைமாதம் முதல் ஆனி வரையுள்ள உத்தராயண காலம் பகற் பொழுதாகவும், ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையுள்ள தட்ஷணாயன காலம் இரவுப் பொழுதாகவும் அமைகின்றது. தேவர்களுக்கு மார்கழி மாதம் வைகறைக் காலமாகையால் திருவாதிரையில் சிவனையும், ஏகாதசியில் மகாவிஷ்ணுவையும் அதிகாலையில் வழிபாடு செய்து இன்புறுவர்.

''வைகறையில் துயிலெழு'' என்பது தமிழ் மூதாட்டியின் வாக்கு. மானிடரையும், தேவர்களையும், இறைவனையும் துயிலெழுப்பும் வகையில் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களைப் பாடியுள்ளார் மாணிக்கவாசகர். இது திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது. ஆதியும் அந்தமும் இல்லாத உறக்கமும் விழிப்பும் இல்லாத ஆண்டவனைத் துயிலெழுப்புவது போல எங்களை நாங்களே உணர்ந்து இருளில் மூழ்கடித்துள்ள மும்மலங்களை நீக்கி ஞானஒளி பெற்று விழிப்படைய வேண்டுமென்பதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

மார்கழி மாத ஞாயிற்றுக் கிழமை விரதம் மிகப்பலனளிக்கும் இம் மாதம் தனு ராசியில் சூரியன் இருக்க நேர்கோட்டில் சந்திரன் திருவாதிரை நட்சத்திரத்தில் மீனராசியில்இருக்கும் காலம். இறைவன் இந் நாள்களிலே திருநடனம் புரிந்து பேரின்பத்தை நமக்குத்தரும் கால

**கா. கணேசதாசன்**

மென்பார்கள்.

இம் மாதத்தில் மக்கள் யாவரும் வைகறையில் எழுந்து நீராடி ஆலய வழிபாடு செய்து திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவைப் பதிகங்களைப் பொருள் உணர்ந்து படித்தல் நன்மை தரும். அவ்வாறு செய்வதன் மூலம் மன அமைதியும், இறை பக்தியும் ஏற்படுவதுடன் எமது பீடைகள் துன்பங்கள் யாவும் அற்றுப் போகும்.

நாம் எமது வீட்டையும், சூழலையும் சுத்தம் செய்து முற்றத்தில் மெழுகிக் கோலமிட்டு, சாணியில் பிள்ளையார் பிடித்து வைத்து, பூவினால் அலங்கரித்து, தீபம் வைத்து வழிபட்டால் தேவர்கள் மனமகிழ்ந்து எம்மையும், எமது வீட்டையும், நாட்டையும் காத்து அருள்புரிவார்கள் என்பது நீண்டகால நம்பிக்கை. ஆகவேஎமது இன்னல்களாகிய இருள் அகற்றி, துயிலுணர்த்தி, ஞான நீராடி, அருள்பெற்று, நன்னெறி காட்டும் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவைப் பாடல்களை ஓதி உணர்ந்து உய்தியடைவோமாக.

சுயநலத்தைக் கருத்திற் கொண்டு மாத்திரம் இறைவனை வணங்காது நமது நாட்டின் நலனை நினைந்து, நமது எதிர்கால வாழ்வை மனதிற் கொண்டு, பொது நல நோக்குடன் இறைவனை வணங்க வேண்டும். எமக்கு மன அமைதியையும் பாதுகாப்பையும், சுபீட்சத்தையும் தரவல்லது தெய்வ வழிபாடு என்பதை நாம் மறந்து விடலாகாது.

சிறப்புமிக்க மார்கழி மாதத்தில் விரதமிருந்து, இறைவழிபாடு செய்து, பிறவிப்பெரும்பயனை அடைவோமாக. ★

## ஆஞ்சநேய சுவாமிகளின் ஜெயந்தி தினம் நாளை

ஸ்ரீ ஆஞ்சநேயர் வாயுவின் புத்திரன் என்பதால் காற்றோடு காற்றாக கலந்து எங்கும் வியாபித்து நிறைந்து பக்தர்களைக் காக்கின்றார். தன்னை வழிபடும் பக்தர்களுக்கு தன்னாற்றலையும், மனவலிமையையும் கொடுக்கும் அவர் சிரஞ்சீவித்தன்மை கொண்டவர். ஆஞ்சநேயர் பிரம்மச்சாரிய விரதத்தை அனுஷ்டிப்பவர் ஆதலால் அவரை வழிபடும் பக்தர்களும் மிகவும் ஆசாரத்துடனும், கட்டுப்பாட்டுடனும் இருந்து வழிபட்டால் அவரது அனுக்கிரகம் உண்டாகும்.

அறிவு விருத்தியாக, அச்சங்கள் அகல, நோய்கள் விலக, தெளிவு பிறக்க, புத்திபலம், மன உறுதிப்பாடு, அஞ்சா

**சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்**

நெஞ்சம், ஆரோக்கியம், வாக்குவன்மை ஆகிய இவை அனைத்தும் ஒருங்கே அமைய ஆஞ்சநேயரை வழிபட்டால் பலனுண்டாகும்.

ஆஞ்சநேய சுவாமிகளை எல்லா நாள்களிலும் வழிபடலாம் எனினும் புதன், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய நாள்கள் ஆஞ்சநேயரை வழிபடுவதற்குரிய சிறப்பான நாள்களாகும். இவருக்கு துளசி மாலையும், வெற்றிலைச்சுருள் மாலையும், வெண்ணெயும் விசேட வழிபாட்டுப் பொருள்களாகும்.

நவவியாக்கியானங்களைக் கற்றதனால் ஆஞ்சநேயரை நவவியாக்கியான பண்டிதர் என்றும் கூறுவர். குதிரை முகம், சிம்ம முகம், வராக முகம், கருட முகம் என்று மேலும் நாலு திருமுகங்களோடு பஞ்சமுக ஆஞ்சநேயராகவும் சுவாமிக்கு ஒரு ரூபம் உண்டு. பத்துத் திருக்கரங்களில் முறையே கத்தி, அங்குசம், சின்முத்திரை, சூலம், விருட்சம், மலை, பாசம், பிண்டி, பாலம், கட்வாங்கம், குண்டிகை ஆகிய ஆயுதங்களைத் தரித்திருக்கின்றார்.

இந்த ரூபத்தில் ஞானம், வீரியம் ஆகிய பலன்களை அளிப்பவராகவும் அச்சம், துன்பம், கவலை போன்ற பிணிகளை அகற்றுபவராகவும் வெற்றி, புகழ் இன்பம் அனைத்தையும் நல்குபவராகவும் விளங்குகின்றார். இந்த வருடம் ஆஞ்சநேய ஜெயந்தி தினம் நாளை சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

''அஞ்சிலே ஒன்று பெற்றான்<br>
அஞ்சிலே ஒன்றைத் தாவி<br>
அஞ்சிலே ஒன்றாக ஆருயிர் காக்க ஏகி<br>
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டயலார் ஊரில்<br>
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவனெம்மை அளித்துக் காப்பான்''

என்று நாமெல்லோரும் பிரார்த்தித்து மார்கழி மாதத்தில் வரும் அமாவாசை மூல நட்சத்திரத்து ஆஞ்சநேய ஜெயந்தியைக் கொண்டாடி இராமதாசனைத் தரிசித்து எங்கள் துன்பங்கள் துயரங்கள் நீங்கி நலமாய் வாழ்வோமாக. ★

### நாளை

மார்கழி 04
சனிக்கிழமை

திதி: பிரதமை
காலை 6.03 வரை.
நட்சத்திரம்: மூலம்
பின்இரவு 1.07 வரை
அமாவாசை விரதம்
சுபநேரம்: 3.23-4.53
ராகுகாலம்: 9.23-10.53
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பேசிய பின்பு வருந்துவதை விட பேசுவதற்கு முன்பே யோசனை செய்வது [illegible]

உடுவில் கோட்ட

## ஆசிரியருக்கு அடுத்தவாரம் இடர்காலக் கொடுப்பனவு

வலிகாமம் தெற்கு, டிசெ. 18

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்குரிய 1997 ஆம் ஆண்டுக்கான இடர் காலக் கொடுப்பனவுகள் அடுத்த வாரம் வழங்கப்பட உள்ளன.

இடர்காலக் கொடுப்பனவுகளைத் துரிதமாக வழங்குவதற்கேற்ற செயற்பாடுகளை கோட்ட உத்தியோகத்தர்கள் மேற் கொண்டு வருகின்றனர்.

கிறிஸ்மஸ் தினத்துக்கு முன்பாக இக்கொடுப்பனவுகள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம், கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு டிசெம்பர் மாத ஆசிரியர் சம்பளத்தையும் முன்னதாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத்தெரியவருகின்றது. (ஐ-152)

வலிகாமம் தெற்கில்

## இரண்டாம் கட்டமாக தென்னங்கன்று வழங்கல்

வலிகாமம் தெற்கு, டிசெ. 18

வலிகாமம் தெற்கு, பிரதேச சபைக்குட்பட்ட மக்களுக்கான இரண்டாம்கட்ட தென்னங்கன்று விநியோகம் எதிர்வரும் சனிக்கிழமை முதல் ஆரம்பமாக உள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட குடியிருப்பாளர்களுக்கு வீட்டுக்கு ஒரு தென்னங்கன்று என்ற ரீதியில் 12 ஆயிரம் தென்னங்கன்றுகளை விநியோகம் செய்ய பிரதேச சபைத் தலைவர் மா. செல்வராசா நடவடிக்கை எடுத்துள்ளார்.

முதற்கட்டமாக ஆறாயிரம் தென்னங்கன்றுகள் இப்பகுதி கிராம சேவையாளர்கள், விவசாயசம்மேளனங்கள் ஊடாக ஏற்கனவே விநியோகிக்கப்பட்டன.

இரண்டாம் கட்ட விநியோகம் எதிர்வரும் சனிக்கிழமை முதல் நடைபெற உள்ளது.

அன்றையதினம் இணுவில் தென்மேற்கு (ஜே/188) இணுவில் கிழக்கு (ஜே/189) இணுவில் மேற்கு (ஜே/191) ஆகிய கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட உள்ளன.

முதற்கட்டத்தில் தென்னங்கன்றுகள் கொடுக்கப்படாத பகுதிகளுக்கே இரண்டாம் கட்டத்தில் அவை விநியோகிக்கப்படும் எனவும், வீட்டுக்கு ஒரு தென்னங்கன்றாவது விநியோகிக்கப்படும் எனவும் மா. செல்வராசா தெரிவித்துள்ளார். (ஐ-152)

## உரம் இல்லை

சாவகச்சேரி, டிசெ. 18.

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் ரி. டீ. எம் உரம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-31)

## மாணவருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் 1998 ஆம் ஆண்டு பகல்நேரக் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து கொண்ட மாணவர்களுக்கான நவம்பர் மாத ஊக்குவிப்புக் கொடுப்பனவு எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கப்பட உள்ளது.

கொடுப்பனவினை நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ். தொழில்நுட்ப கல்லூரி அதிபர் சு. செந்தில்நாதன் கேட்டுள்ளார். (ஐ-ரீ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

மருதங்கேணி தாளையடி ஞா. வாசுகி ஆகிய எனது விசேட அடையாள அட்டை கைதடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேல் உள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.
(61377)

கனகசபாபதி தயாளினி என்பவரது விசேட அடையாள அட்டை (இல. 091001459) கடந்த (15 - 12 - 98) செவ்வாய்க்கிழமை ராஜ பாதை வீதிக்கும் பலாலி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஐங்கரன் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலிச் சந்தி எனும் முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.
(61387)

### தேவை

கொடிகாமம் நகர்ப்பகுதியில் வியாபாரம் செய்யக் கூடிய கடை வாடகைக்குத் தேவை. முற்பணம் வழங்கப்படும். தொடர்பு: சி. தேவராசா, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி,
(சி-5802)

கொடிகாமம் நகர்ப்பகுதியில் கடை அறை விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்: சி. தேவராசா, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.
(சி-5803)

### ஆங்கிலம் விசேடமாக

O/L 99 Distinction. Credit பெறுபேறடையவும் G. A. Q. (Spoken English) ஆண்டு 6 தொடக்கம் 10 வரை கற்பிக்கப்படும். B. Sc. London Inter ஆசிரியரால். 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி.
(61375)

## சுன்னாகம் பஸ் நிலையக் கொட்டகைகள் சேதம்

வலிகாமம் தெற்கு, டிசெ. 18

காங்கேசன்துறை — யாழ்ப்பாணம் பிரதான வீதியில் முக்கிய சந்தியான சுன்னாகம் மத்திய பஸ் நிலையம் பல வசதியீனங்களைக் கொண்டுள்ளதால் பஸ் போக்குவரத்தை மேற்கொள்ளும் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்ளவேண்டி உள்ளது.

சுன்னாகம் மத்திய பஸ் நிலைய கொட்டகைகள் உடைந்த நிலையில் காணப்படுகின்றன. மழை காலத்தில் போக்குவரத்துப் பயணிகள் அங்கு பஸ்ஸுக்காக காத்து நிற்க முடியாதுள்ளது.

ஓரளவு நல்ல நிலையில் காணப்படும் கொட்டகையொன்று பயணிகள் தரித்து நிற்பதற்கு போதுமானதாக இல்லை.

மேலும் பஸ் நிலையத்தில் முன்னர் இருந்தது போல நேர அட்டவணை எதுவும் வைக்கப்படாமையால் பஸ் பயண நேரங்களை பயணிகள் அறிந்து கொள்ளமுடியாதிருக்கின்றது.

அத்துடன் பஸ் நிலையத்துக்கு அருகே உள்ள பாலம் திருத்தப்படாத நிலையில் காணப்படுவதும் போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ.152)

## வீதி திருத்தப்படவில்லை

அச்சுவேலி, டிசெ. 18

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை செல்வநாயகபுரம் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. இந்த வீதியால் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அச்சுவேலி - வயாவிளான் வீதி பயன்படுத்த முடியாமல் இருப்பதால் கோணவளை, குட்டியப்புலம், திடற்புலம், சுந்தரபுரம் மஸ்கன் பகுதியில் குடியிருப்போரும், விவசாயம் செய்வோரும் கைத்தொழிற்பேட்டை – செல்வநாயகபுரம் வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

(ஐ-11)

## பாடசாலையைப் புனரமைக்க ரூபா $5\frac{1}{2}$ லட்சம் செலவானது

வலிகாமம் தெற்கு, டிசெ. 18

ஐந்தரை இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள புன்னாலைக் கட்டுவன் மகாவித்தியாலயத்தின் கட்டடத்தை உடுவில் கல்விக்கோட்டக் கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் சென்ற வாரம் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தார்.

1986 ஆம் ஆண்டில் இருந்து இப்பாடசாலை இடம் பெயர்ந்து தற்காலிகமாக தனியார் கட்டடத்தில் இயங்கி வந்தது.

அண்மைக்காலப் போர் அனர்த்தங்களால் மேற்படி பாடசாலைக் கட்டடங்கள் யாவும் முற்றாகச் சேதமுற்றிருந்தன. தற்போது மீண்டும் அப்பாடசாலைக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுச் சொந்தக் காணியில் இயங்கத் தொடங்கியுள்ளது.

பாடசாலை அதிபர் ந. குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவையொட்டி பாடசாலைக்கு அருகில் உள்ள ஐயனார் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெற்றன.

புன்னாலைக்கட்டுவன் அ. த. க. பாடசாலை முன்னாள் அதிபர் முதலித்தம்பி, புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலய இளைப்பாறிய ஆசிரியர் சண்முகம்பிள்ளை, கோப்பாய்க் கோட்ட சமூகக்கல்வி முதன்மை ஆசிரியர் செல்வப்பிரகாசம், கிராமசேவையாளர் சிவதாசன், பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் மங்களதாஸ் மற்றும் புன்னாலைக் கட்டுவன் தெற்கு, வடக்கு உப தபாலதிபர்கள் உட்படப் பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

(ஐ-152)

## கண்காட்சி

நவாலி, டிசெ, 18

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வடக்கு—கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித்திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் தையல், மனையியல் கண்காட்சி இன்றும் நாளையும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அண்மையிலுள்ள கட்டடத்தில் இடம்பெறும்.

உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இடம்பெறும் இவ் வைபவத்திற்கு பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்வார்.

(ஐ-100)

## முதற் கட்ட கொடுப்பனவு பட்டியல் பார்வைக்கு

தென்மராட்சி, டிசெ. 18

தென்மராட்சி பிரதேசத்தில் வன்செயல் காரணமாக அசையும், அசையாச் சொத்துக்கான பாதிப்புக்கு உள்ளான ரூபா ஆயிரத்து 500க்கு குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களில் முதல் கட்டக் கொடுப்பனவுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் பிரதேச செயலகத்திலும், அந்தந்த கிராம அலுவலர் அலுவலகத்திலும் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டக் கொடுப்பனவாக ரூபா 5 ஆயிரம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## ஆவரங்காலில் கண், நீரிழிவு பரிசோதனை

அச்சுவேலி, டிசெ. 18

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் உதவியுடன் ஆவரங்கால் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தில் கண் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, மருத்துவப் பரிசோதனை ஆகியவை இம் மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

பரிசோதனை செய்ய விரும்புவோர் ஆவரங்கால் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

(இ-11)

## ஒளி விழா

நவாலி, டிசெ. 18

நல்லூர்ப் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினர் நடத்தும் ஒளிவிழா இன்று வெள்ளி பி. ப 2.15மணி முதல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

(ஐ-100-86)


C. C. A.
யாழ்.
A/L 99
கணக்கீடு
ஆரம்பம்: 19 - 12 - 98
(சனி 11 — 12)
பங்குமீட்பு
BY: S. COLLIN
(B.B.A)
(61384)


## உடுவிலில் நாவலர் விழா

வலிகாமம் தெற்கு, டிசெ. 18

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் கடந்த சனிக்கிழமை ஆறுமுக நாவலர் விழா உடுவிலில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது:

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு மன்றத்தலைவர் தி. தியாகச்சந்திரன் தலைமை வகித்தார்.

விழா ஆரம்பத்தில் உடுவில் சிவஞானப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து 'நாவலரின் திரு உருவப்படம் நாதகானத்துடன் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு எடுத்து வரப்பட்டது.

பொதுமக்கள் தம் வீட்டு வாசல்களில் பூரணகும்பம் வைத்து நாவலர் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்தனர்.

உடுவில் பிள்ளையார் பல்பொருள் வாணிப உரிமையாளர் நவநீத கிருஷ்ணன் மங்களவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இளைப்பாறிய அதிபர் ஆசிரிய மணி அ. பஞ்சாட்சரம் சிறப்புரையாற்றினார்.

மூதறிஞரும் இளைப்பாறிய அதிபருமான சி. சிவசரவணபவன் (சிற்பி) நாவலர் நினைவுரை வழங்கினார்.

மன்ற ஆதரவில் நடத்தப்படும் பாலர் பாடசாலைகளின் மாணவர்களிடையே நடத்தப்பட்ட நவராத்திரி தின போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு மன்றக் காப்பாளருள் ஒருவரான ஆறு திருமுருகன் பரிசுகள் வழங்கினார்.

மன்ற நடன வகுப்புமாணவிகளின் நடன நிகழ்ச்சியும் இடம் பெற்றது. (இ-152)


இப்பொழுது
யாழ்ப்பாணத்திலும்
CEDRIC
மண்ணெண்ணெய் கேஸ் குக்கர்
* சிலிண்டர் தேவையில்லை
* கேஸைப் போன்ற நீலச்சுவாலையுடன் எரியக்கூடியது.
* மணம் இல்லை. கரிபிடிக்காது. காற்று அழுத்தம் தேவையில்லை.
3500/= மட்டுமே
தொலைபேசி இல. 323223
98, Braybrook Place, Colombo 02.
தலைமை அலுவலகம்
172, Kensington Church Street, Kensington, London. W8 BN
Tel: 0171792 1881 (10 Lines) Fax: 0171 243 8034

ஏஜண்டுகள் தேவை
(சி/5784)


## செய்திக் கொத்து

### மரம் ஏற்றியவர் காயம்

நெல்லியடி, டிசெ. 18

உழவு இயந்திரத்தில் வேப்பம் மரங்களை ஏற்றிக்கொண்டிருந்த இளைஞனின் கையின்மேல் வேப்பம்குற்றி ஒன்று வீழ்ந்ததில் அவரது கைவிரல்கள் நசியுண்டன.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை 5 மணியளவில் கரணவாய் அண்ணா சிலையடியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் தவரூபன் (வயது 18) என்பவரே இடது கைவிரல்கள் இரண்டிலும் படுகாயம் அடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்.

(ஐ-109)

### வீதியில் குழிகள்

நெல்லியடி, டிசெ. 18

யாழ். பருத்தித்துறை வீதியில் புத்தூர்ச்சந்திக்கு அருகிலுள்ள இராணுவ — பொலீஸ் சோதனைச் சாவடிப் பகுதி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால், இப்பகுதியால் பிரயாணம் மேற்கொள்ளும் வாகனங்கள் குடைசாயும் ஆபத்து உள்ளது.

(ஐ-309)

### அலுவலகம் இடம்மாற்றம்

தென்மராட்சி, டிசெ. 18

சாவகச்சேரி பருத்தித்துறை வீதியில் இயங்கி வந்த சாவகச்சேரி லயன்ஸ் கழகச் செயலகம் கடந்த முதலாம் திகதி தொடக்கம் டச்சு வீதி பழநி ஆண்டவர் ஆலயத்திற்கு முன்பாக உள்ள கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக கழகச் செயலாளர் லயன் அ. பொ. செல்லையா தெரிவித்தார்.

முன்னர் லயன்ஸ் கழக செயலகம் இருந்த கட்டடத்தில் கல்வி வலயம் நான்கின் அலுவலகம் இயங்குவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-117)

### உரம் வரவில்லை

தென்மராட்சி, டிசெ. 18

காலபோக நெற்செய்கைக்குப் பயன் படுத்தும் ரி. டி. எம் உரம் தென்மராட்சிப் பிரதேச கமநல கேந்திர நிலையங்களுக்கு இன்னமும் வந்து சேராததால் இப்பிரதேச விவசாயிகள் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கடைகளில் அதிகரித்த விலையில் இதனை வாங்கிப் பயன்படுத்துகின்றனர்.

(ஐ-117)

### காணி உரிமையாளர் தாக்கப்பட்டார்

தேங்காய் பிடுங்குவதற்காக சென்ற காணி உரிமையாளர் காணிக்குள் குடியிருப்பவர்களால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த ஞாயிறன்று மாலை சங்கத்தானையில் இடம் பெற்றது.

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைச் சேர்ந்த கே. குலேந்திரராசா (வயது 40) என்பவரே தாக்கப்பட்டு தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செலலப்பட்டார். (ஐ-117)

### நூல் வெளியீட்டு விழா

நாவற்குழி மகா வித்தியாலய மாணவர்களின் வணிகதீபம் நூல் வெளியீட்டு விழா கடந்த 10ஆம் திகதி வியாழக்கிழமை வித்தியாலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை தலைவர் க. தேவராசா பிரதம விருந்தினராகவும், வணிகக்கல்வி விசேடபாட அலுவலர் வ. க. பாலசுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (ஐ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். போதனா வைத்தியசாலை

# நேர்முகப் பரீட்சையை இங்கு நடத்த சுகாதார அமைச்சு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ். போதனா வைத்தியசாலைக்கான ஆய்வுகூட உத்தியோகத்தர் மற்றும் களஞ்சியக் காப்பாளர்களுக்கான நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு சுகாதார அமைச்சு அனுமதி மறுத்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை சிற்றூழியர்களுக்கிடையில் நடத்தப்படவிருந்த இந்த நேர்முகப் பரீட்சை தொடர்பாக அண்மையில் கொழும்பு சென்ற யாழ். வைத்தியசாலை அதிகாரிகள் குழு சுகாதார அமைச்சுடன் பேச்சு நடத்திய போது கொழும்பில் நடத்தப்படும் இந்த நேர்முகப் பரீட்சைக்கு ஆஸ்பத்திரி ஊழியர்கள் சமுகமளிக்க வேண்டுமென பணிப்புரை வழங்கப்பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள போக்குவரத்து பிரச்சினைகளினால் கொழும்புக்கு ஊழியர்கள் வரமுடியாத நிலையிலுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டபோதும் இந்த நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் எழுதுநர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதி பொது நிர்வாக அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-15-5)

---

உ

வைரவர் துணை

யாழ்ப்பாணம்

## சத்திரம் ஞானவைரவர் தேவஸ்தானம் மண்டலாபிஷேக பூர்த்திவிழா

யாழ்ப்பாணம் சத்திரம் ஞான வைரவப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் இன்று (18-12-98) வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 12 மணி வரை 1008 சங்காபிஷேகமும் மண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் நடைபெற்று மதியம் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

நாளை (19-12-98) சனிக்கிழமை வைரவ சாந்திப் பொங்கல் நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் வருக!

அவனருள் பெறுக!

ஆயுட்கால தலைவரும்,
ஆலய பரிபாலனசபையினரும்.

(61402)

---

நாளை ஆரம்பம்

## விக்னா கல்வி நிறுவனம்

கணக்கீடு

திரு. பாலவாசன்

A/L 2000

சொத்து விற்பனை
1.00 - 2.00 P.M

A/L 99

கம்பனி முடிவுக் க/கு
2.00 - 4.00 P.M

[61396]

---

புலமைப் பரிசில் 1999

16 ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்

1. சு. லிஜா
   யா/ சு.ம.க.
2. T. காயத்திரி
3. வி. மயூரன்
   யா/ இ.ஆ.பா.
4. செ. நிமலன்
5. கா. பங்கயன்
   யா/ இ.ஆ.பா

அடுத்த பரீட்சை
20-12-1998

BOND

யாழ். நகர்

(61405)

---

யாழ். வலயத்தில்

## கல்வி அதிகாரிகளின் பொறுப்புகள் ஒப்படைப்பு

குருநகர், டிசெ. 18

யாழ். வலயக் கல்விப்பணிமனையில் கடமைபுரியும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ச. நா. தணிகாசலம்பிள்ளையால் ஒதுக்கி வழங்கப்பட்டுள்ளன.

திருமதி எஸ். மகாலிங்கம் பொது நிர்வாகத்துக்கும், எஸ். இராசலிங்கம் கல்வி அபிவிருத்தி-2 ற்கும், க. கனகசிங்கம் கல்வி அபிவிருத்தி-1 ற்கும், என். வரதராசா திட்டமிடலும் மீளாய்வுப் பொறுப்புக்கும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக கடமைபுரிய நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-51)

## விசேட அடையாள அட்டை

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ். நகர மேற்கு (ஜே73) கிராம சேவையாளர் பிரிவில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டை இன்று காலை 9-00 மணிக்கு சின்னக்கடை இராணுவ முகாமில் வைத்து வழங்கப்படும் என்று அப்பகுதிக் கிராம சேவையாளர் அறிவித்துள்ளார். (இ-3)

## சமய நிகழ்வில்

நவாலி, டிசெ. 18

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலயத்தில் விநாயக விரதத்தை ஒட்டி கடந்த 4 ஆம் திகதி முதல் தினமும் காலை 10 மணிக்கு பிள்ளையார் பெருங்கதைப் புராணப் படிப்பு இடம்பெற்று வருகின்றது. (ஐ-100)

## திருத்தம்

யாழ்ப்பாண மத்திய கல்லூரி உள்ளரங்க விளையாட்டுக் கழகம் நடத்தும் முன்னாள் அதிபர் கலாநிதி நைல்ஸ் ஞாபகார்த்த உள்ளரங்க விளையாட்டுப்போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன அல்லவா?

இது தொடர்பாக 17 ஆம் திகதி உதயனில் பிரசுரமான விளம்பரத்தில் ஆண்கள்—பெண்களுக்கான (திறந்த அடிப்படையில்) என்பது தவறுதலாக (சிறந்த அடிப்படையில்) என்று பிரசுரமாகி விட்டது.

திறந்த அடிப்படையில் என்பதே சரியானது ஆகும் தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

## தென்னங்கன்று விநியோகம்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையினால் 4ஆயிரத்து 700 தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

மேற்படி பிரதேச சபை எல்லைக்குள்ளிருக்கும் ச. ச. நிலையங்கள் ஊடாக இந்த விநியோகம் இடம்பெறும்.

இப்பகுதியில் தற்பொழுது 40 சனசமூக நிலையங்கள் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)

---

## யாழ்ப்பாண மாநகரசபை

### 1999 ஆம் ஆண்டுக்கான வழங்குனர்களைப் பதிவு செய்தல்

11-11-98-ம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரமாகிய மேற்படி விளம்பரத்தின் பிரகாரம் வழங்குனர்களைப் பதிவு செய்வதற்கான கால எல்லை 24-12-98-ம் திகதி வியாழக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(சி/5818)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
நா. எழில்வண்ணனின்
அருமைத் தந்தையார்

### இ. நாகராசா

அவர்கள் இறைபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

99 ஆம் ஆண்டு மாணவர்கள்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

(61400)

---

## மரண அறிவித்தல்

### Dr. சின்னையா யோகலிங்கம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வதிவிடமாகவும் தற்போது கண்டியில் வசித்து வந்தவருமான Dr. சின்னையா யோகலிங்கம் 16.12.98 இல் கண்டியில் காலமானார்,

இவர் காலஞ்சென்ற முத்தையா சின்னையா (ஓவசியர்) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கி. முத்தையா தம்பதிகளின் மருமகனும், சற்குணவதியின் Retired Research Assistant, Aggriculture Dept.) அன்புக்கணவரும், காலஞ்சென்ற தர்மலிங்கம், காலஞ்சென்ற கனகலிங்கம் (மலேசியா), இராஜலட்சுமி, S. G. நடேசலிங்கம் (Inspector fo Police Colombo), கமலவேணி, சாந்தபவானி, S. D. பல்குணலாலா (ஆசிரியர், மல்லாகம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் சகோதரனும், ரதிதேவி (மீனா - பிரான்ஸ்), ரதிக்கா (யாழ். மருத்துவபீடம்), நிருபா (Gemmologist, Kandy) ஆகியோரின் தந்தையும் றயாகரனின் [பிரான்ஸ்] அன்பு மாமனாரும், அஸ்வினி, ஜனனி, சுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17-12-98) கண்டியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோ. ரதிக்கா
(மகள்)

36/5, மணல்தறை லேன்,
கந்தர்மடம்.

[61397]

---

## சாவகச்சேரி நகரசபை

### கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 30 - 12 - 1998 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதேதினம் 10-30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) 'தரம் எம் 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலும் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் மாத்திரமே கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையவராவர்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | கேள்விப்பத்திரக் கட்டணம் |
|---|---|---|
| 1. பஸ் நிலைய வீதி, பஸ்நிலையப் பகுதி திருத்த வேலை | 2000/- | 500/- |

கேள்விப் பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 28 - 12 - 1998 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மு. செ. சரவணபவ
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
12 - 12 - 98

[சி/5817]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுத்துறை கைதிகள் விடுதலை பற்றி சட்டமா அதிபருடன் ஆராயப்படும்

## மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 18

களுத்துறைச் சிறைச்சாலையில் விசாரணை எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக சட்டமா அதிபருடன் ஆலோசித்து முடிவு எடுக்கப்படும்—

இவ்வாறு களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளிடம் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆணையாளர் ஒய்வுபெற்ற நீதியரசர் நி. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் களுத்துறை சிறைச்சாலைக்குச் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளைப் பார்வையிட்டார்.

சிறையில் தம்மைச் சந்தித்த ஆணையாளரிடம் தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கைதிகள் வேண்டுகோள்விடுத்தனர்.

குற்றம் எதுவும் இழைக்காத நிலையில் கைதுசெய்யப்பட்ட தம்மிடம் கடுமையான சித்திரவதைகளைச் செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது என்றும்—

உண்மையில் தாங்கள் குற்றவாளிகள் அல்லர் என்றும்—

நீதி விசாரணையோ, வழக்குத் தாக்கலோ இன்றி நீண்டகாலம் சிறை வைக்கப்பட்டிருக்கும் தம்மை விடுவிக்க உதவும்படியும்—ஆணைக்குழு ஆணையாளரிடம் கைதிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

இவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஆணையாளர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறினார்.

இதேவேளை களுத்துறைச் சிறைச்சாலையில் விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாண இளைஞர்களின் விவரங்களைப் பெற்று அனுப்புமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அதிகாரி எஸ்.சிறிதரன் குழுவின் கொழும்புத் தலைமையகத்துக்கு அறிவித்துள்ளார்.

(இ-5)

## இந்திய விஜயத்தின் போது புலிகள் தொடர்பாகவும் ஜனாதிபதி பேசுவார்

கொழும்பு, டிசெ. 18

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான உயர்மட்டக் குழு ஒன்று மாத இறுதியில் இந்தியா செல்லவிருக்கின்றது.

இந்தக் குழுவில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 15 ஆம் திகதி புதுடில்லியில் ஆரம்பமான இலங்கை – இந்திய கூட்டு கமிஷன் கூட்டத்தில் இவர்கள் கலந்து கொள்ள உள்ளனர். வர்த்தக ஒப்பந்தம் ஒன்றிலும் ஜனாதிபதி கைச்சாத்திடுவார்.

இந்த விஜயத்தின் போது விடுதலைப் புலிகள் தொடர்பாக இந்திய உயர் மட்டத் தலைவர்களுடனும் ஜனாதிபதி கலந்துரையாடுவார்.

விடுதலைப் புலிகள் சம்பந்தமான இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை என்பதில் இலங்கைக்குச் சந்தேகம் எதுவும் கிடையாது என்று கொழும்பில் அரசாங்க தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

### மட்டுப்படுத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

டார் தாக்குதலில் 15 படையினர் காயம் அடைந்தனர். இந்த நடவடிக்கையில் 21 விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர்.

வன்னி விளாங்குளத்தில் மேற்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையில் நான்கு விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர் — இப்படி அவர் தெரிவித்தார்.

(இ-3)

### நாளை மறுதினம்...

(முதலாம் பக்கத் தொடர்)

ரிக்கெட்டுக்கள் வழங்கப்படும் என்றும் —

முதல் வருபவர்களுக்கு முதலிடம் என்ற அடிப்படையில் இந்த ரிக்கெட்டுக்கள் வழங்கப்படும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

ரிக்கெட் பெறுபவர்களைப் பயண ஏற்பாடுகளுடன் நாளை காலை யாழ். ரயில் நிலையத்தில் கூடுமாறும் அவர் கேட்டுள்ளார்.

அதே நேரம் —

திருகோணமலையில் இருந்து 372 அகதிகளையும், 732 தனிப்பட்ட பயணிகளையும் ஏற்றிக் கொண்டு இக்கப்பல் இன்று காலை காங்கேசன்துறை நோக்கிப் புறப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறையில் இருந்து நாளை மறுதினம் திருகோணமலைக்குப் புறப்படும் கப்பல் அங்கு பயணிகளை இறக்கிவிட்டு கொழும்பு செல்லும் என்றும் —

இக்கப்பல் மூலம் பயணிகளை அழைத்துச் செல்லும் பணி மீண்டும் ஜனவரியில் ஆரம்பிக்கும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. [இ-3]


## பிற்போடப்பட்டுள்ளது

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவ மன்றத்தினால் **19 - 12 - 1998** அன்று நடைபெற இருந்த

**"வீரதீரச் செயல்கள்"**

தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சி நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்,

★ நுழைவுச் சீட்டுக்கள் நிகழ்ச்சி நடைபெறும் தினம் வரை செல்லுபடியாகும்.

**- வணிக மாணவர் மன்றம்**

கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம். (61401)


## நிவாரண உலர் உணவு

## பால்மா பைக்கற்றுகளே அதிகம் விநியோகம்

அரியாலை, டிசெ. 18

யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த இடம்பெயர்ந்தோருக்கான தற்போது வழங்கப்பட்டு வரும் உணவு முத்திரையின் 69 ஆவது 'ஏ' 'பி' புள்ளிகளுக்கான நிவாரணப் பொருள்களில் இம்முறையும் பால்மா பைக்கற்றுக்கள் அதிகளவு வழங்கப்பட்டு வருகின்றன.

ஒரு அங்கத்தவருக்கு ஒரு 'றெட்கௌவ்' பால்மா பைக்கற் என்ற அடிப்படையில் 5 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு ஐந்து பால்மா பைக்கட்டுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இம்முறை நிவாரண விநியோகத்தில் சீனியின் அளவும் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த 68 ஆவது 'எ' 'பி' உலர் உணவு முத்திரை புள்ளிகளுக்கும் வழங்கப்பட்ட நிவாரண விநியோகத்திலும் இந்த நடைமுறையே பின்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஐ-17)

## 4,000 பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனம்

வேலையற்றிருக்கும் பட்டதாரிகளில் 4 ஆயிரம் பேருக்கு உடனடியாக அரச திணைக்களங்களில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தபால் தொலைத் தொடர்பு தகவல்துறை அமைச்சர் மங்கள சமரவீர அறிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிக்கும் வகையில் நேற்று கொழும்பில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

வேலையற்ற பட்டதாரிகளில் ஒரு தொகுதியினருக்கு உடனடியாக நியமனங்கள் வழங்கப்படல் வேண்டும் என்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வேண்டுகோளை அமைச்சரவை ஏற்றுக் கொண்டதை அடுத்து இந்த நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டதாகவும்—

நியமனம் பெறும் பட்டதாரிகளில் 3 ஆயிரம் பேர் அபிவிருத்தி உதவியாளர், நிகழ்ச்சித்திட்டதயாரிப்பு உதவியாளர். கமத்தொழில், கால்நடை வளர்ப்பு உதவியாளர் பதவிகளில் அமர்த்தப்படுவர் எனவும்—

மிகுதி ஆயிரம் பேர் அரச திணைக்களங்களில் மொழி பெயர்ப்பாளர்களாக நியமிக்கப்படுவர் எனவும் —

இவ்வாறு நியமனம் பெறுபவர்களுக்கு மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா சம்பளமாக வழங்கப்படும் எனவும் —

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவேண்டும் எனவும் அமைச்சர் மங்கள சமரவீர கேட்டுள்ளார்.

### பல்கலைக்...

(முதலாம் பக்கத் தொடர்)

கலைக் கழகத்தில் இடம்பெற்று வரும் வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து துணைவேந்தர் மானிய ஆணைக்குழுத் தலைவருக்கு அறிவித்திருந்தார்.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான இது விடயமாக அமைச்சரவைக்கு சமர்பித்த கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அதே நேரம்—

தற்போதையநிலை குறித்து ஆராய சகல ஊழியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் ஏற்பாடாகியுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

(இ-3-7)

### தப்பிய...

(முதலாம் பக்கத் தொடர்)

தில் தமக்கு அருகில் உள்ள இராணுவ முகாமில் சரண் அடையலாம் என்றும்—

இவ்வாறு சரண் அடைபவர்களுக்கு தண்டனை எதுவும் வழங்கப்படாது சம்பளம் வழங்கப்படும் என்றும்— இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

(இ-3-7)

### அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஏகாதிபத்தியவாதியான கிளின்ரன் தன் மீதான குற்றப் பிரேரணையை மூடி மறைப்பதற்காக ஈராக் நாட்டு மக்கள் மீது யுத்தம் தொடுத்திருப்பதை நாம் இலங்கை வாழ் தமிழ் மக்கள் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இக்கொடூர யுத்தத்துக்கு உலகின் எந்தப் பகுதி மக்களும் ஆதரவு கொடுக்கமாட்டார்கள் என்பதால் யுத்தத்தில் வெற்றி பெறும் வரை அடிபணியாதுமுகம் கொடுக்க வேண்டும் என்று ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேய்னைக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த யுத்தத்துக்கு எதிரான எமது எதிர்ப்பு உணர்வுகளை எமது நாட்டில் வெளிப்படுத்தக்கூடிய இடங்களில் வெளிப்படுத்தி யுத்தத்தில் ஈடுபடும் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு கொடுக்கக் கூடிய அழுத்தங்களை கொடுப்பதன் மூலம் ஈராக் மக்களுக்கும், ஈராக் ஜனாதிபதிக்கும் எமது ஆதரவைத் தெரிவிப்போம்— இப்படி அந்த அறிக்கைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## திருமலையில் மோதல்

மட்டக்களப்பு, டிசெ. 18

திருகோணமலை பாலந்தோப்பு என்னும் இடத்தில் பதுங்கியிருந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த மோதலில் 3 படையினர் காயம் அடைந்தனர்.

இந்த மோதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவரின் சடலத்தை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடாகியுள்ளதாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3-21)

## கொழும்பு பல்கலைக்கழகம் மூடப்பட்டது

கொழும்பு, டிசெ. 18

மாணவர் குழுக்கள் இரண்டுக்கிடையில் ஏற்பட்ட கோஷ்டி மோதலை அடுத்து கொழும்புப் பல்கலைக்கழகம் நேற்றுப் பிற்பகல் முதல் காலவரையறையின்றி மூடப்பட்டது.

மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல்களைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளும் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்தே பல்கலைக்கழகம் மூடப்பட்டதாக பதில் துணைவேந்தர் அறிவித்துள்ளார். [இ-7]

### ஈராக்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதேசமயம் ஈராக் மீது அமெரிக்காவும், பிரிட்டனும் இணைந்து மேற்கொண்ட ஏவுகணை மற்றும் விமானத் தாக்குதல்களின் தொடர்ச்சியாக பெரும் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள அமெரிக்கா தயாராகி வருவதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல்களுக்காக 200 போர் விமானங்களும் 20 யுத்தக் கப்பல்களும் தயார் நிலையில் உள்ளதாக நேற்றிரவு வெளியான செய்திகள் தெரிவித்தன.

இத்தாக்குதல் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் ஈராக்கும் எதிர்த்தாக்குதலில் ஈடுபடும் என ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேயின் எச்சரித்துள்ளார்.

ஈராக்கில் உள்ள அணு, இரசாயன, உயிரியல் ஆயுதங்களை அழிப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம்என்று அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

ஈராக்அதிபர் சதாம் ஹுசேய்னின் பலத்தைக்குறைத்து அவரைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு இந்த தாக்குதல் வழிவகுக்கும் என்றும் அவர் கூறினார். (3 ஆம் பக்கமும் பார்க்க) (இ-3-7)

### அருந்த 18 மாத...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த நிலையில் இந்த அறிவிப்பு வெளி வந்ததன் மூலம் நாடாளுமன்றத் தேர்தல் பெரும்பாலும் அடுத்த நவம்பரிலும் ஜனாதிபதித் தேர்தல் அதற்கு முன்னரும் நடத்தப்படலாம் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்தனர்.

### புலிகளின் குரல்...

(முதலாம் பக்கத் தொடர்)

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று நடந்த சமயம் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்கும்போதே இதைத் தெரிவித்தார்.

''புலிகளின் குரல்'' நிகழ்ச்சிகள் தற்சமயம் சிற்றலை வரிசையில் ஒலிபரப்பாகிறதே. அது பற்றி தெரியுமா? எனச் செய்தியாளர்கள் அவரிடம் கேட்டனர்.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை ஏன் நிறுத்தப்பட்டது? என்று செய்தியாளர் இராணுவப் பேச்சாளரிடம் கேட்ட போது, வேறு வழிமுறைகளையும், குறிக்கோள்களையும் கடைப்பிடிக்கவே அந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டது என்று கூறினார். (இ-3)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் [illegible] யார் வீதி. 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-12-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org